யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 28 திங்கட்கிழமை (10-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 75


## வவுனியா மீது நேற்றும் பீரங்கித் தாக்குதல்!

கொழும்பு, பெப். 10

வவுனியா நகரத்தின் மீது நேற்றும் இரண்டாவது நாளாக விடுதலைப் புலிகள் ஆட்லறித் தாக்குதல் நடத்தி இருக்கின்றார்கள்.

நேற்று அதிகாலை 2-30 மணியளவில் ஐந்து ஆட்லறிக் குண்டுகள் ஏவப்பட்டன. அவற்றில் மூன்று இராணுவ முகாம் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. எனினும் பருஞ் சேதம் ஏதும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.

உடனடியாக — இதற்குப் பதிலடியாக ஷெல் வந்த திசையில் விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

வவுனியா நகரில் இருந்து மேற்குப்பக்கமாக உள்ள படையினரின் முன்னணிக் காவலரண் பகுதிக்குப் பக்கத்தில் உள்ள கிராமங்களில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜீப் மீது தாக்குதல்

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் கல்குடாவில் இருந்து வாழைச்சேனை நோக்கி உயர் பொலீஸ் அதிகாரிகளுடன் சென்று கொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது வாழைச் சேனையில் வைத்து புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலை பொலீஸார் முறியடித்தனர் என்றும் —

ஜீப் சிறிது சேதம் அடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## சென்னையில் நேற்று ஈழவேந்தன் கைது!

சென்னை, பெப். 10

விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் உட்பட 5 பேரை கியூ (புலனாய்வு) பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை சென்னையில் வைத்து கைது செய்தனர் என்று இந்தியவானொலி அறிவித்தது.

சென்னை டி.டி.கே. சாலையில் உள்ள குடியிருப்பு ஒன்றில் பாண்டியன் எனப்படும் முரளீதரனும் வேறு 4 பேரும் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்குத் தேவையானமருந்துகளையும், பிறபொருள்களையும் வாங்குவது குறித்து திட்டமிட்டுக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டதாக கியூ பிரிவு செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழீழ விடுதலை முன்னணிப் பொதுச் செயலாளர் ஈழவேந்தன், எழுத்தாளரும் நூல் வெளியீட்டாளருமான

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுத்திட்டம் இறுதி வடிவ நிலையில் புலிகளுடன் கலந்தாலோசிக்கப்படும்

## பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, பெப்ரவரி. 10

**"இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டம் இறுதி வடிவம் பெறும்போது அது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் கலந்தாலோசனை செய்யப்படும். அவர்களும் தீர்வு முயற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்."**

**- இவ்வாறு கூறியிருக்கின்றார் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்.**

கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினரர்.

"விடுதலைப் புலிகள் இன்றி அதிகாரப்பரவலாக்கல் தீர்வை நிறைவேற்றும் சாத்தியம் உண்டா? —என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

"அதிகாரப் பரவலாக்கல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுவரொட்டி போராட்டம்

கொழும்பு, பெப். 10

தெற்கில் உள்ளூராட்சித் தேர்தல் சூடுபிடித்திருப்பதை அடுத்து —

அரசியற் கட்சிகள் பலவும் மும்முரமாக சுவரொட்டிப் போரை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது இடங்களில் உள்ள சுவர்கள், விளம்பரப் பலகைகள் எங்கும் வர்ணச் சுவரொட்டிகள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. (உ-3)

## முச்சந்தி முரளி



அப்ப...... அச்சுக்கூடங்கள் பாடு ஒரே கொண்டாட்டம் எண்டு சொல்லுங்கோ......!

## 'எடிபல' நடவடிக்கை முதற் கட்டம் பூர்த்தி

வவுனியாவில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட "எடிபல" இராணுவ நடவடிக்கையின் முதல் கட்டம் முடிவடைந்து விட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் சனியன்று தகவல் வெளியிட்டன என்று கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவித்தன.

மதவாச்சி - மன்னார் வீதி, வவுனியா - மன்னார் வீதி ஆகியவை சந்திக்கும் பறையனாளம் குளம் பகுதியை படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் —

தற்போது கைப்பற்றிய நிலைகளை அவர்கள் பலப்படுத்துவதாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

முக்கோண வடிவிலான பிரதேசத்தைப் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-3-150)

## ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வு

கொழும்பு, பெப். 10

வன்னிப் பகுதியை நோக்கி படையினர் ஆரம்பித்திருக்கும் 'எடிபல' இராணுவ நடவடிக்கையை அடுத்து, மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புகள் மீது ஷெல் மழை பொழிவதாகவும் —

இதன் காரணமாக ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வதாகவும் —

புலிகளின் தகவல்களை மேற்கோள்காட்டி 'ரோய்ட்டர்' நிறுவனம் செய்தி வெளியிட்டது என்று கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் 'யெஸ் எவ். எம்.' அறிவித்தது.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஏற்கும் தீர்வே சாத்தியமானதாகும்!

### அரசுக்கு தொண்டா தெரிவிப்பு

"விடுதலைப் புலிகள் ஏற்காத ஓர் அரசியல் தீர்வு செயற்படுத்த முடியாதொன்றாகவே இருக்கும்" — என்று அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான் அரசுக்கு அறிவித்துள்ளார்.

"ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் அமைதியைக் கொண்டு வரமாட்டாது. இந்தத் தமிழ்க் கட்சிகள் யாவும் பெயரளவில் தான் இயங்குகின்றன.

"விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி அவர்கள் ஏற்கத்தக்கதாக முன்வைக்கப்படும் தீர்வே செயல்படுத்தப் படக் கூடியதாக இருக்கும்."

— என்று தொண்டமான் தெரிவித்ததாக 'சண்டே லீடர்' பத்திரிகை குறிப்பிட்டது. (உ-3-150)

## இ.தொ.கா. சர்ச்சைக்கு இன்று முடிவு?

கொழும்பு, பெப். 10

இ.தொ.காவின் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானா? அல்லது எம். எஸ். செல்லச்சாமியா? — இது குறித்து தேர்தல் ஆணையாளர் தமது இறுதி முடிவை இன்று அறிவிப்பார்.

இ.தொ.காவின் பொதுச் செயலாளராக எம். எஸ். செல்லச்சாமியை தேர்தல் ஆணையாளர் அறிவித்ததை அடுத்து இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான் [illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாகனங்களுடன் தற்கொலைக் குழுக்கள்!

### கொழும்புக்குள் ஊடுருவல்!!

கொழும்பில் தாக்குதல்கள் மற்றும் அரசியல் கொலைகளைச் செய்வதற்காக இரு புலிகளின் தற்கொலைக் குழுக்கள் கொழும்பிற்குள் ஊடுருவி இருப்பதாக தகவல் கிடைத்துள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே லீடர்" நேற்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதலுக்காக மட்டக்களப்பில்இருந்து'பஜரோ' ஒன்றும்,'டபிள் கப்'வாகனம் ஒன்றும் கொழும்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்திற்கு முதற் கிழமை அல்லது அடுத்த கிழமை தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. பொலீஸார் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதால்இத் தாக்குதல் தடுக்கப்பட்டு விட்டது.

ஆனாலும் அந்த வாகனங்களுடன் இரு குழுக்களும் கொழும்புக்குள் நடமாடிவருகின்றன — என்று பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

[உ-3-150]

## மட்டு. ஓட்டமாவடியில் தமிழ்-முஸ்லிம் கலவரம்!

கொழும்பு, பெப்.10

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியில் நேற்றுக் காலை முஸ்லிம் ஊர்காவலர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டார். இச் சம்பவத்தை அடுத்து அங்கு தமிழர் — முஸ்லிம்கள் கலவரம் வெடித்தது.

இக்கலவரங்களில் மூன்று தமிழர் கொல்லப்பட்டுள்ளனர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டம் இவ்வருடம் முதல் அமுலுக்கு!

## சுற்றறிக்கை கிடைத்தது

வலிகாமம் தெற்கு, பெப். 10

சிங்கள, தமிழ்மொழி மூல பாடசாலைகள் சகலவற்றிலும் ஐந்தாம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டம் இவ் வருடம் முதல் அமுல் செய்யப்பட உள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக்கல்விப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டம் இவ்வருடம் முதல் அமுல் படுத்தப்படும்.

இது சம்பந்தமாக கல்வி உயர் கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. எம். டி. டீ. பீரிஸ் சகல கல்விப் பணிப்பாளர்கள், கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.

புதிய பாடத் திட்டத்தை அமுல் செய்வதற்கு வசதியாக பாடப் பரப்பு, ஒவ்வொரு பாடத்துக்கும் வாராந்தம் ஒதுக்கப்பட வேண்டிய பாடவேளைகள், கால அளவீடுகள் போன்ற விவரங்கள் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஐ-152)

## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்

**திரு. சு. இரத்தினராசா**

யாழ். வலயம் I இன் கல்விப்பணிப்பாளராக இன்று பதவியேற்பதையிட்டு எமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(சி/104)

## பாராட்டுகின்றோம்

எமது குடிலில் குடியிருந்த
உடுவில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. சு. இரத்தினராசா**

அவர்கள் வலயம் I இன் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றமை அறிந்து அக மிக மகிழ்கின்றோம். நல்லவன், வல்லவன், வெல்பவனை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பெற்றோர், நலன்விரும்பிகள்.
**வீரசிங்கம் ம. வி. - மீசாலை.**

''அறிவகம்'',
187, கண்டி வீதி,
மீசாலை.

(சி/105)

## பாம்புக்கடிக்கு இலக்கான சிப்பாய்

யாழ். நகரப்பகுதியில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்கானார்.

யாழ். நகர பிரதான இராணுவ முகாம் பகுதியிலேயே நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பாம்புக்கடிக்கு இலக்கான எச். கே. கருணாபிய (வயது 19) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டார்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**G.C.E. (A/L)**
**கணக்கியல்**
**திரு. பாலவாசன்**

**98 A/L**
**வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**
ஆரம்பம்: 12-02-1997
புதன் பி.ப. 400 மணி

**99 A/L**
ஆரம்பம்: 14-02-1997
வெள்ளி பி.ப. 4-00 மணி

(45206)

## வைத்தியம்

'அஸ்மா' அல்லது 'முட்டு' என்ற நோயால் அவஸ்தைப்படுகின்றீர்களா? துரித நிவாரணத்திற்கு யாழ். கண்டி வீதி 92 A என்னும் இலக்கத்தில் தற்காலிகமாக வந்திருக்கும் **வைத்தியர் முருகையா** அவர்களைச் சந்தியுங்கள்.

முருகையா

(சி/102)

# இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், பெப். 10

காங்கேசன்துறையில் இருந்து இன்று திருகோணமலைக்குச் செல்லும் மூன்று கப்பல்களில் 590 பயணிகள் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பட்டியல் இலக்கம் 409 முதல் 461 வரை, 188 முதல் 202 வரை, 492 முதல் 500 வரை மற்றும் 521 ஆகியவற்றில் பெயர் பதிவு செய்தவர்களை இக்கப்பலில் பயணம் செய்வதற்காக இன்று காலை 7மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## செல்லச்சாமி ராஜினாமா!

கொழும்பு, பெப். 10

பட்டுநூல் அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவியில் இருந்து எம். எஸ். செல்லச்சாமி திடீரென ராஜினாமாச் செய்துள்ளார்.

இ. தொ. காவில் இருந்து விலக்கப்பட்ட பின்னர் மேற்படி பதவியை ஜனாதிபதி அவருக்கு வழங்கியிருந்தார்.

கடந்த 6 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்த அவர் தமது ராஜினாமாக் கடிதத்தை அப்போது சமர்ப்பித்தார்.

தமது ராஜினாமாவுக்கான காரணத்தைப் பின்னர் தெரிவிப்பதாக செல்லச்சாமி ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அதே வேளை —

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் செல்லச்சாமியின் கட்சி சார்பில் இரு பிரமுகர்கள் ஐ. தே. க. பட்டியலில் போட்டியிடலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பேச்சடிபட்டது. (உ-3-150)

## ஆலோசகர் நியமனம்

கொழும்பு, பெப். 10

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தைப் பிரசாரம் செய்யும் செயற்பாட்டுக்கு ஆலோசகராக வண. சோமானந்த தேரர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ''சண்டே லீடர்'' செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய நல்லிணக்க அமைச்சில் இருந்து செயற்படும் இவர், ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் வழங்கப்படவிருக்கிறது. வெண் தாமரை இயக்கத்தில் இவர் முக்கிய பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-150)

## வாழ்த்துகின்றோம்

ஞான வீர சனசமூக நிலையத்தின் தலைவர்
திரு. க. ம. இராஜேந்திரனின் மகளும்
மாணவர் மறுமலர்ச்சிக் கழக உறுப்பினருமாகிய

**இ. தர்சிகா**


புலமைப்பரிசில் பரீட்சையில் 126 புள்ளிகள் பெற்றமைக்காக அவரை பாராட்டுகிறோம்.

**மாணவர் மறுமலர்ச்சிக் கழகம்,**
**கோண்டாவில்.**


(சி/106)

# மங்களகரமான திறப்பு விழா

இன்று 10-02-1997 நண்பகல் 12.30-1.30 மணிவரையுள்ள சுபவேளையில்
எமது புதிய வியாபார ஸ்தாபனத்தை
**திருவாளர் கனகரட்ணம் கேசவன் J. P. U. M.**
(Justice of the Peace and Unofficial Magistrate, Attorney - At - Law and Notary Public, Commissioner for Oaths)
அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்,
அவ்வேளையில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகின்றோம்.



## CITY CAR SALES CENTER SHOW ROOM



No. 441 - K. K. S. Road, (SIVAN CONER) JAFFNA.

## சிற்றி கார் சேல்ஸ் சென்ரர் காட்சியறை

இல. 441, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ எமது காட்சியறையில் முற்றிலும் மறுசீரமைக்கப்பட்ட (Reconditioned) வாகனங்கள் விற்பனைக்கு உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

★ வாடிக்கையாளர்கள் தங்களிடம் உள்ள எந்த ஒரு வகையான வாகனத்தையும் விற்பனை செய்ய விரும்பின் — ★ மற்றும் தரமான வாகனங்களை நம்பிக்கையுடனும், உத்தரவாதத்துடனும் கொள்வனவுசெய்ய விரும்பின் — ★ மேலும் உங்களிடம் உள்ள வாகனத்தினை மாற்றி அதற்குப் பதிலாக எமது காட்சியறையில் உள்ள வாகனத்தைக் கொள்வனவு செய்ய (Part Exchange) விரும்பின் — அதற்கான கொள்வனவு முறை நடைமுறையில் உள்ளது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

### எமது சகநிறுவனங்கள்

**Dilka Furniture Palace Show Room** No. 441/1, K. K. S, Road, Jaffna.
ஆர்ப்பிக்கோ சேஸ்ரா மெத்தைகள் உருக்கு, தளபாடங்கள், மரத்தளபாடங்கள், அனைத்து வகையான கண்ணாடி வகைகள் விற்பனையாளர்கள்.
"TRANSPORT AVAILABLE"

**Jaffna Glass Merchants** No. 234, K. K. S. Road, Jaffna.
யன்னல் கண்ணாடி வகைகள் (Figured Glass), சோக்கேஸ் கண்ணாடிவகைகள் (Plain Glass), கறுப்புக் கண்ணாடிகள் (Tinted Glass) அனைத்தினையும் உங்கள் அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
"TRANSPORT AVAILABLE"

**SPANCAA GROUP ESTABLISHMENTS** (45195)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் [illegible]

## பதவி நீக்கிய ஜனாதிபதி தப்பிஓட்டம்

ஈக்குவடோர், பெப். 10

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஈகுவடோர் ஜனாதிபதி அப்தலா புக்காரம் ஜனாதிபதி மாளிகையிலிருந்து தப்பி ஓடியுள்ளார்.

ஆயினும், தாம் தமது சொந்த ஊரான சியாகுவில் இருந்தவாறு நாட்டைத் தொடர்ந்தும் ஆளப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று நபர்கள் நாட்டின் ஜனாதிபதி தாமே எனக் கூறிக்கொள்வதால் ஈகுவடோரில் பதற்றநிலை நிலவுகின்றது. (ஐ-5)

## புதுக்கோட்டை தேர்தல் முடிவு நாளை

நடைபெற்று முடிந்த புதுக்கோட்டை சட்ட மன்றத் தேர்தல் வாக்குகளை எண்ணும் பணி நாளை ஆரம்பமாகவுள்ளது. முடிவுகள் நாளை மாலையே வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழகத்தில் மத கலகங்களை அடக்க விசேட அதிரடிப்படை

## கருணாநிதி உத்தரவு

தமிழ்நாட்டில் மதக்கலவரங்களை அடக்குவதற்காக விசேட அதிரடிப்படை ஒன்றை அமைப்பதற்கு முதலமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இத்தகவலை வெளிவிட்ட மாநில காவல்துறைத் தலைவர் கே. கே. ராஜசேகரநாயர், இந்த சிறப்பு அதிரடிப்படையை அமைப்பதற்கான வழிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

கடந்த மாதம் பொள்ளாச்சியில் முஸ்லிம் அமைப்பு ஒன்றின் தலைவராக இருந்த பழனி பாபா என்பவர் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வன்செயல்கள் மூண்டன. அவை போன்ற மத வன்செயல்களைத் தடுப்பதற்காகவே இந்த விசேட அதிரடிப் படையை அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த விசேட அதிரடிப் படையினருக்கு பணியில் ஈடுபடுத்த முன்னர் விசேட பயிற்சி அளிக்கப்படும் என்று காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## 25 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதிமனிதனின் ஆயுதங்கள்!

### எதியோப்பியாவில் கண்டுபிடிப்பு

அடிஸ் அபாபா, பெப். 10

மனித இனத்தின் மூதாதையர்கள் பற்றி ஆராய்ந்து வரும் எதியோப்பிய மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் வடக்கு எதியோப்பியாவில் 25 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதர்கள் உபயோகித்ததாகக் கருதப்படும் கல்லால் செய்யப்பட்ட ஆயுதங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஆற்றங்கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கல் ஆயுதங்களை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்தக் கல் ஆயுதங்களை மனிதர்கள் பயன்படுத்தினார்களா? அல்லது மனிதர்களின் மூதாதையர்களான மனிதக் குரங்குகள் பயன் படுத்தினவா? என்ற ஆய்வில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். (ஐ-5)

## குள்ளமாகவளரும் குழந்தைகள்

மத்திய சீனாவில் சிஸ்வான் என்ற மாகாணத்தில் கியூலண்ட் என்ற கிராமத்தில் பிறக்கும் குழந்தைகளில் பெரும்பாலானோர் குள்ளத் தன்மை உடையவர்களாகவே வளர்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான காரணத்தை விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

அந்தக் கிராமத்தில் உபயோகிக்கும் குடி நீரில் பாதரசத்தின் அளவு அதிகமாக கலந்திருந்ததே குழந்தைகளின் வளர்ச்சி பாதிக்கப்படுவதற்கும் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. (ஐ-5)

# ஏழு மணி நேரச் சமரில் 600 பேரை பலி கொண்ட பரந்தன் சண்டை

## விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியது எதனை?

இது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயமே. இராணுவம் தனது அடுத்த படை நடவடிக்கையை ஆரம்பிக்கும் வரை விடுதலைப் புலிகள் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை அவர்கள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர்.

பரந்தன் மற்றும் ஆனையிறவு முகாம்களை இலக்காக வைத்து விடுதலைப் புலிகள் கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அரச இராணுவத்திற்கு எதிராகப் பாரிய தாக்குதலை மேற்கொண்டனர். அவர்கள் தேர்ந்தெடுக்கும் நேரத்தில் தேர்ந்தெடுக்கும் நிலை மீது தாக்குதலை மேற்கொள்ளும் திட்டத்திற்கு அமைய மேற்கொண்ட இந்தத் தாக்குதலானது 1996 ஜூலை மாதத்தில் 1,200 படைவீரர்களைப் பலிகொண்ட முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலாகும்.

இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட தினத்தன்று மாலை பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் இத்தாக்குதல் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். ''விடுதலைப் புலிகளின் தாக்குதல் காரணமாக 9 படைவீரர்கள் கொல்லப்பட்டனர். 232 படைவீரர்கள் காயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 500 பேர் வரையில் கொல்லப்பட்டு அல்லது காயமடைந்திருக்கலாம்'' எனத் தெரிவித்தார். புள்ளி விவரங்களை வெளியிடுவதில் ஜெனரல் ரத்வத்த உண்மையில் மிகவும் கவனமாகவே இருந்தார்.

### முரண்பாடான தகவல்கள்

அன்றுமாலை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட தகவலில் 60 படைவீரர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு மறுதினம் கொல்லப்பட்ட படைவீரர்களின் எண்ணிக்கை 142 பேராகவும், கொல்லப்பட்ட புலிகளின் எண்ணிக்கை 350 ஆகவும் அதிகரித்தது. இரண்டு நாள்களுக்குப் பின்னர் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கொல்லப்பட்ட படைவீரர்களின் தொகை 223 எனத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர் புள்ளி விவரங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் இரண்டு நாள்கள் மௌனம் சாதித்தனர். ஜனவரி மாதம் 11 ஆம் திகதி காலை விடுதலைப் புலிகளின் லண்டன் பணிமனை வெளியிட்ட அறிக்கையில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த 200–க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர் எனவும் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பரந்தன், ஆனையிறவு தாக்குதல் பற்றிய புள்ளி விவரங்களின்படி இரு தரப்பிலும் சமமான தொகையில் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலின் போது பெருந் தொகையில் ஒரேயடியாக முன்னேறித் தாக்குவதற்குப் பதிலாக பாதுகாப்பு வலயத்தை உடைப்பதற்கு தற்கொலைப் படைப்பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தந்திரோபாயம் இராணுவத்திற்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தவில்லை. இருப்பினும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் அவர்களின் ஆற்றலைக் குறைப்பதும் ஆயுதக் களஞ்சியத்தை அழிப்பதுமே புலிகளின் குறிக்கோளாக இருந்தது. தங்களது குறிக்கோளின் பெரும் பகுதியை நிறைவேற்றியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் அறிக்கையின் படி 11 பீரங்கிகள் அழிக்கப்பட்டுள்ளன. சுமார் 10 கிலோ மீற்றர் பாதுகாப்பு வலயத்தை உடைத்துச் சென்றகெரில்லா படையினர் இராணுவத்தின் ஆயுதக் களஞ்சியத்தை அழித்ததாகத் தெரிவிக்கின்றன. 122 மி. மீற்றர் ஆட்டிலறிகள் ஒன்பதையும், 130 மி. மீற்றர் ஆட்டிலறிகள் இரண்டையும் அழித்துள்ளனர். யந்திரத் துப்பாக்கிகள் மூன்று அதற்குரிய ரவைகள், எறிகணைகள், பெருமளவிலான தானியங்கித் துப்பாக்கிகள் ஆகியன விடுதலைப் புலிகள் வசமாகின.

தங்களது பணிகள் முடிவடைந்த பின்னர் புலிகள் களம் திரும்பினர் என லண்டன் பணிமனை அறிவித்தல் தெரிவித்தது.

> பரந்தன் தாக்குதல் குறித்து புறொன்ட்லைன் சஞ்சிகையில் அமித் பருவா ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை சிங்களத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு ''லக்பிம'' சிங்கள வார இதழில் வெளியாகியுள்ளது. அக்கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

விடுலைப் புலிகள் ஆட்டிலறிகளை அழித்து விட்டதாக தெரிவித்ததை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்ததுடன் ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படாமல் தடுக்கப்பட்டது எனத் தெரிவித்தது.

ஜனவரி 9 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையின்படி படைவீரர்களாலேயே ஆட்டிலறிகள் அழிக்கப்பட்டுள்ளன. இரு தரப்பினரும் வெளியிடும் புள்ளிவிவரங்களும் தகவல்களும் வெவ்வேறாயினும் சிறிலங்கா இராணுவத்திற்குச் சொந்தமான சில ஆயுதங்கள் அழிந்துள்ளன என்பது உண்மையே. 1996 ஜூலை மாதத்தில் முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போதும் பல கனரக ஆயுதங்களை அரசு இழந்தது.

### தற்கொலைப் படையினர்

முல்லைத்தீவு முகாம் வேறு முகாம்கள் எவற்றுடனும் தொடர்பில்லாமல் தனித்து அமைந்திருந்தது. ஆனால் பரந்தன் மற்றும் ஆனையிறவு பாதுகாப்பு வலயத்திற்குள் வான் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் மேலதிகப் [illegible] தது. முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலைப் போலவே இந்தத் தாக்குதலிலும் முன்னணிக் காப்பரண்களை அழிப்பதற்கு தற்கொலைப் படையினரை அனுப்பும் தந்திரோபாயம் அனுசரிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் மேற்கொள்ளவுள்ள இராணுவ நடவடிக்கைகள் பற்றி சில நாள்களாக இராணுவம் திட்டமிட்டு வந்தது. இராணுவத்திலிருந்து தப்பியோடியோரை மீண்டும் இராணுவத்தில் சேர்ப்பதில் இராணுவம் ஓரளவு வெற்றி பெற்ற போதிலும் புதிதாக இராணுவத்தில் சேருவோரின் தொகை அதிகரிக்கவில்லை. முன்னணிக் காப்பரண்களைக் கையாள இராணுவத்திற்கு பெருமளவில் ஆளணி தேவை. கைப்பற்றப்பட்ட யாழ் குடாநாட்டைப் பாதுகாப்பதற்கும் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கும் அதிகளவில் படைவீரர்களை இராணுவம் ஈடுபடுத்தியுள்ளது.

வவுனியா —யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையைக் கைப்பற்றிப் பராமரிக்க அதிகளவு படைவீரர்கள் தேவையாகும். இராணுவம் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகளை நன்கு தெரிந்து வைத்துள்ள விடுதலைப் புலிகள் இராணுவம் புதிய நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் பரந்தன் மீதான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அமைதியான சூழ்நிலையைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் பரந்தன் — ஆனையிறவு முகாம்கள் மீதான தாக்குதலை மேற் கொண்டுள்ளனர். முல்லைத்தீவு முகாமை முற்றாக அழிப்பதற்கும் இந்தத் தந்திரோபாயமே கையாளப்பட்டது.

### புலிகளுக்குப் பரிச்சயமானது

கெரில்லா யுத்த தந்திரங்கள் பற்றி விடுதலைப் புலிகளுக்கு நல்ல பரிச்சயம் உள்ளது. கெரில்லாப் போர் முறை வளர்ச்சியடைய கனரக ஆயுதங்களுக்குப் பதிலாக தற்கொலைத் தாக்குதல்களை பயன்படுத்த ஆரம்பித்தனர். இவ்வித தந்திரங்களைக் கையாண்டு முடிந்தளவு அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற்கொண்டுவருகின்றனர்.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தையும் கிளிநொச்சியையும் இழந்தனர். இதனால் அவர்கள் காட்டுக்குச் செல்ல நேரிட்டது. இதன் மூலம் இராணுவத்தினருடன் போரிடும் ஆற்றலை அவர்கள் இழந்துவிட்டார்கள் எனக் கூறமுடியாது. 7 மணித்தியாலங்கள் இடம் பெற்ற சண்டையில் இரு தரப்பிலும் 573 பேர் இறந்துள்ளனர். ஜனவரி 9 ஆம் திகதி பரந்தன் ஆனையிறவில் இடம்பெற்ற சண்டை எத்தகையது என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

இடம்பெற்ற சண்டை எவ்வளவு கொடியதாக இருப்பினும் இருதரப்பினரும் தங்கள் எதிர்தரப்பில் எவரையும் சிறைப்பிடிக்கவில்லை என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவிக்கிறது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தாங்கள் முக்கிய பங்காளிகள் என்பதை இத் தாக்குதல் மூலம் விடுதலைப் புலிகள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கு உணர்த்தியுள்ளனர்.

பரந்தன், ஆனையிறவு மீதான தாக்குதலின் பின்னர் புலிகள் பின்வருமாறு தெரிவித்தனர்.

''தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இராணுவம் யுத்த ரீதியிலான தீர்வினைத் தேடக்கூடாது என்பதைத் தெரிவிக்கும் நல்ல ஓர் அறிவிப்பாக பரந்தன் ஆனையிறவுத் தாக்குதல்களில் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த வெற்றி அமையும்''

### படையினர் எதிர்நோக்கும் புதிய யுத்தமுறை

பரந்தன் மற்றும் ஆனையிறவு முகாம்களில் இருந்து கிளிநொச்சி இராணுவ முகாமைத் தனிமைப்படுத்தும் எண்ணம் ஜனவரி 9 ஆம் திகதி நடைபெற்ற சண்டையில் விடுதலைப் புலிகளுக்குக் கைகூடாத போதிலும் இந்தத் தாக்குதலானது பாதுகாப்புப் படையினருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. மரபுவழி யுத்த முறைக்குப் புறம்பான ஒரு யுத்த முறைக்கு படையினர் முகங்கொடுக்கநேர்ந்துள்ளது.

புதிதாக நடத்திய இந்த யுத்தத்தின் மூலம் அரசியல் சமரச முயற்சிகள் எதற்கும் தாங்கள் தயாராக இல்லை. என்பதை விடுதலைப் புலிகள் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர்.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளிருந்து கொல்லும் வியாதியால் எமது சமுதாயத்திற்குப் பெரும் அழிவு!

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

அன்புடன் தமிழ் மக்களுக்கு!

நீண்ட நாள்களுக்குப்பின் நேரடியாக கருத்துக்களை பகிர்ந்து கொள்ளகிடைத்தமை பெருமகிழ்ச்சிக்குரியதே. 17 வருட ஈவிரக்கமற்ற யுத்தமும் இடையில் தோன்றிய சர்வாதிகாரப் போக்கும் மக்களாகிய உங்களையும் அரசியற்கட்சியை சேர்ந்தவர்களாகிய எங்களையுமே மாத்திரம் பிரித்துவிடவில்லை. உங்களின் உற்றசுற்றம், நண்பர்கள், உடன் பிறந்தவர்கள், தாய் பிள்ளை தந்தை தனயன் எல்லோரையுமே பிரித்துவிட்டது. கவிஞன் வ. ஐ. ச. ஜெயபாலன் தனது கவிதை வரிகளில் கூறியதுபோல 'விதிக்குரங்கு கிழித்தெறிந்த பஞ்சுத்தலையணை' ஆகிவிட்டது எம் வாழ்வு.

1986 இன் இறுதிவாக்கில் புலிகளால் தடைசெய்யப்பட்ட எமது ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றியும், எம்போன்று தடைசெய்யப்பட்ட சக ஸ்தாபனங்களை சேர்ந்தவர்களைப் பற்றியும் துரோகிகள் என்றுதான் அறிந்திருப்பீர்கள். ஆம், இங்கு நீண்டகாலமாக கோலோச்சியவர்கள் உங்களுக்கு சொல்லி வைத்தது அப்படித்தான். அவர்களின் சொல்லைமீறி தென்மராட்சியிலிருந்தும், கொழும்பிலிருந்தும் திரும்பிவந்தற்காக அந்தத் துரோகிகள் பட்டத்தைத்தான் உங்களுக்கும் சூட்டினார்கள். உங்களுக்கு ஏற்படும் எல்லாச் சிரமங்களுக்கும் நாங்களும் காரணமானவர்கள் என்று கூறப்பட்டது. தெருக்கூத்து உட்பட பல்வேறு பிரசார வடிவங்கள் ஊடாகவும் நாம் அவ்வாறு சித்திரிக்கப்பட்டோம். எல்லாப் பாவங்களையும் சுமப்பவர்களாக நாமும் எம்மைப்போன்ற சக இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் நின்றிருந்தோம்.

''சூரியக்கதிர் 1, 2'' இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து நீங்கள் வேருடன் பெயர்ந்து செல்லும் துரதிர்ஷ்டம் ஏற்பட்டதையிட்டு நாம் மிகுந்த வேதனையும் விரக்தியும் அடைந்தோம்.

### எமது துரதிர்ஷ்டம்

தமிழ்ச் சமுதாயத்தின் உரிமைப்போராட்டத்தில் எமது ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும், சக ஸ்தாபனங்களைச் சார்ந்தவர்களும் உயிரை அர்ப்பணித்தல் உட்பட சகல விதமான தியாகங்களையும் செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் அரச பயங்கர வாதத்திற்கு எதிராக ஐக்கியப்பட்டு நின்று போராட தயாராக இருந்தவர்கள்;போராடியவர்கள்; ஐக்கியத்திற்காக விசுவாசமாக உழைத்தவர்கள். இன்னும் ஐக்கியத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஆனால் எமது துரதிர்ஷ்டம் உள்ளிருந்தே கொல்லும் வியாதி. எமது சமுதாயத்தின் அழிவுக்கு அந்த வியாதி பெரும பங்களிப்பு செய்கிறது என்பதனை நீங்கள் மறுக்க மாட்டீர்கள்.

அன்புக்கினிய தமிழ் மக்களே!

நாம் எமது எதிர்காலச் சந்ததியின் சுபீட்சமான மகிழ்ச்சியான வாழ்வுக்காகத் தானே போராடப்புறப்பட்டோம்? ஆனால் 17 வருடங்களின் பின் உறவுகளை இழந்த, பிரிந்த சிதையுண்ட வாழ்வு ஏன் எமக்கு மிச்சமாக கிடைத்தது? சிந்திக்க வேண்டிய, பதில் காண வேண்டிய கேள்வி இது எமது போராட்டத்தில் எங்கேயோ பாரிய கோளாறு ஏற்பட்டு இருக்கிறது. இதனைக் கண்டுபிடிக்கா விட்டால் அல்லது அலட்சியம் செய்தால் மேலும் மேலும் அடிமைத்தளையில் சிக்குண்டு போகவேண்டிய நிலை ஏற்படலாம். யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த பெண் கவிஞர் சிவரமணி தற்கொலை செய்து கொள்ளுமுன் சில காத்திரமான கவிதைகளை எழுதியிருந்தாள். அவற்றில் ஒரு வரி இதுதான் ''நாம் இங்கு வாய் திறப்பதெல்லாம் உண்பதற்கும் குடிப்பதற்கும் மாத்திரம்தான்''. ஆம், உங்கள் சமகால வாழ்க்கை பற்றிய மன அதிர்வுகளை ஏற்படுத்தும் வரி இது.

நாம் தென்னாசியாவில் மெத்தப் படித்தவர்கள் என்று இறுமாந்திருந்தவர்கள் அது ஓரளவு உண்மையும் கூட. ஆனால் நாம் ஒருவரோடு ஒருவர் சுதந்திரமாக — இயல்பாக — பேச முடியாத மனிதர்களாக்கப்பட்டோம். தாயும் பிள்ளையும் கூட மனம்விட்டு பேச முடியாத ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டது. ஒரு தனி மனிதனின் சிந்தனைக்கேற்ப நாம் வாழ வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஒரு மிக உயர்ந்த கல்வி, கலாசார, பாரம்பரியத்திற்கு சொந்தக்காரர்களாகிய நாம் எவ்வாறு இத்தகைய ஒரு சர்வாதிகாரத் தனத்திற்கு ஆட்பட்டோம்? ஏன் எம்மால் இதனை எதிர்த்து குரல் கொடுக்க முடியாமல் போனது?

### நீளும் பட்டியல்

எம் ஊரவர் கொல்லப்பட்டார்கள்;நாம்ஏன்என்றுகேட்கவில்லை. எம் அண்டை அயலார் கொல்லப்பட்டார்கள்; நாம் ஏனென்று கேட்கவில்லை. இறுதியில் நாமே அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். ஏன் என்று கேட்க யாருமில்லை. எத்தனை கண்ணியமான பெறுமதிவாய்ந்த மனிதர்களை நாம் இழந்திருக்கிறோம். யாழ். மருத்துவக் கல்லூரி உடல் கூற்றியல் துறைத்தலைவர் ரஜனி திரணகம, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், பரி.யோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராசா, யாழ். முன்னாள் அரச அதிபர் பஞ்சலிங்கம், பல்கலைக்கழக மாணவன் விஜிதரன், விடுதலைப் போராளியும் பல்கலைகழக மாணவர் தலைவருமாகிய விமலேஸ்வரன், பெண் கவிஞர் செல்வி இன்னும் எத்தனை சாதாரண பொதுமக்கள், எமது ஸ்தாபனத்தின் தலைவர் பத்மநாபா, ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறீசபாரத்தினம், புளொட் இயக்க தலைவர்களில் ஒருவரான வாசுதேவா இன்னும் பல நூற்றுக்கணக்கான போராளிகள் எல்லோரையும் காவு கொடுத்திருக்கிறோம். இவர்கள் எல்லோரும் தேசத்துரோகிகளாக அல்லது சமூகவிரோதிகளாக சித்திரிக்கப்பட்டே படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த படுகொலைகளையெல்லாம் படித்த நாகரிகமான சமுதாயமென்று கூறிக் கொள்ளும் எம் தமிழினம் மௌனமாக. எதிர்ப்பு எதனையுமே காட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தது வேதனை தரும் உண்மையாகும். ஆனால் இந்தக் கொலைப்பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறதே தவிர முடிவு கிட்டவில்லை. தற்போதைய அவலமான சூழ் நிலையில் இவையெல்லாம் ஏன் திரும்பப் பேசப்படுவான் என உங்களில் சிலர் நினைக்கக் கூடும்.

### மௌனமாக இருந்தீர்கள்

நாம் யார்மீதும் கொண்ட வெறுப்பிலோ, குரோதத்திலோ இதனை எழுதவில்லை. நாம் மற்றவர்களை சுட்டிக் காட்டமுன்

> அண்மையில் யாழ். நகரில் தனது அலுவலகத்தைத் திறந்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது நிலைப்பாடு குறித்து யாழ். மக்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த நீண்ட அறிக்கையின் முதற் பகுதி இங்கு பிரசுரமாகுகின்றது.

என்ன தவறு செய்தோம் என்று திரும்பிப்பார்க்க வேண்டும். ''நீ மற்றவனின் கண்களில் இருக்கும் துரும்பைப் பார்ப்பதைவிட உன்னுடைய கண்ணில் இருக்கும் விட்டத்தைப் பார்க்க வேண்டும்'' என்று யேசுநாதர் தன் போதனைகளில் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே எம்மவர் இழைத்த தவறுகளை முதலில் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தவறிழைத்தவர்களும் தமது தவறுகளை திரும்பிப்பார்க்க வேண்டும். இதுவே எமது இதய சுத்தியனா அவா.

## பகுதி - 1

கொடூரங்கள் நடந்தபோது மக்களே! நீங்களும் மௌனமாக இருத்துவிட்டீர்கள். அநியாயம் நடக்கும்போது மௌனமாக இருப்பது அந்த அநியாயத்தைவிட கொடுமையானது.

★ இயக்கங்கள் தடைசெய்யப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள்.

★ மாற்று இயக்க போராளிகள், தலைவர்கள் குற்றுயிரும் குலையுயிருமாக எரியூட்டப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள்.

★ இந்தியாவுடன் எம்மவர்கள் யுத்ததை தொடர்ந்தபோது மௌனமாக இருந்தீர்கள்.

★ எம்முடன் ஒன்றாக வாழ்ந்த முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள்.

இதற்கெல்லாம்மூலகாரணமாக இருந்தவர்கள் இந்தியாவிற்கும் நண்பர்களாக இருக்கவில்லை; முஸ்லிம்களுக்கும் நண்பர்களாக இருக்கவில்லை; தமிழர்களுக்கும் நண்பர்களாகஇருக்கவில்லை; கடைசியாக தமக்கும் நண்பர்களாக இருக்கவில்லை. சென்னையில் நடைபெற்ற தோழர் பத்மநாபா இரங்கல் கூட்டமொன்றில் எம்மிடையே இருக்கும் சர்வாதிகார சக்திபற்றி தமிழகத்தின் பிரபல முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன் இவ்வாறுதான் குறிப்பிட்டார், இது இன்னும் பொருந்தக்கூடிய தீர்க்க தரிசனம் மிக்க கருத்து.

### நாமும் தவறிழைத்தோம்

இனிய தமிழ் மக்களே!

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினராகிய நாங்கள் ஒன்றும் [illegible] நாங்களும் தவறுகள் இழைத்திருக்கிறோம். குறிப்பாக இந்திய அமைதிகாப்புப் படை இங்கு தரித்திருந்த காலத்தில் தேசிய இராணுவத்திற்கான தொண்டர்களைத் திரட்டுவதில் பலாத்காரமான நடைமுறைகளை கடைப்பிடித்தோம். புலிகளுக்கெதிரான போரில் சில அப்பாவிகளின் இழப்புக்கும் நாம் காரணமாக இருந்திருக்கிறோம். ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபையை இந்திய அமைதி காப்புப்படை இங்கு தரித்திருக்கும் காலத்திலேயே பலப்படுத்தும் நோக்கத்தில் தேசிய இராணுவத்திற்கு ஆட்களை திரட்ட வேண்டி ஏற்பட்டது. நோக்கம் நல்லதாக இருந்தாலும் அது ஒரு பாரிய தவறு என்பதனை உங்கள்முன் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறோம். உங்கள் முன் எமது தவறுகளை கூறுவதற்கு வெட்கப்படவில்லை. ஆனால் நாம் பல வருடங்களாக தீண்டத்தகாதவர்களாக சித்திரிக்கப்பட்டிருக்கிறோம். பாரபட்சம் இல்லாத தொடர்புசாதனங்களோ, வேறு வழிவகைகளோ இல்லாத காலத்தில் சரி எது? பிழை எது? என்று பகுத்துணரமுடியாத நிலை உங்களுக்கு இருந்தது.

மக்களே!

எமக்குள்ள கவலையெல்லாம் இதுதான் பீதியின் நிழலில் ஆளுமைகளை இழந்த நிலையில் உங்களது வாழ்க்கைதான் துயரத்தை ஏற்படுத்துகிறது.

★ பயத்திலிருந்து விடுபட வேண்டும்.

★ சுதந்திரமாக - பட்டவர்த்தனமாக - எவர்க்கும் அஞ்சாமல் கருத்து கூறும் நிலை;செயற்படும் நிலை ஏற்பட வேண்டும்.

ஏன் எம்மைப்பற்றிக்கூட சுதந்திரமாக எம்மிடமே கூறும் நிலை வரவேண்டும். ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு அது அவசியம்.

இந்தப்போராட்டத்தில் எல்லா இயக்கங்களுடைய செயற்பாட்டிற்கான சுதந்திரமும், நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்று பகுத்தறிவதற்கான சூழ்நிலையும், எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் கருத்துச் சுதந்திரமும் காப்பாற்றப்பட்டிருந்தால் தற்போதைய நிலை ஏற்பட்டிருக்காது.

### இருட்டடிப்பும் திரித்துக் கூறலும்

மூடுண்ட நிலையில் அல்லது இரும்புத்திரையிடப்பட்ட நிலையில் வாழ்ந்த உங்களுக்கு வெளியுலக நிகழ்வுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன: அல்லது திரித்துக் கூறப்பட்டன. சாதாரண சிங்கள மக்கள் பற்றி உங்களுக்கு உண்மைக்கு புறம்பான கருத்துக்கள் கூறப்பட்டன. பேரினவாதிகள் வேறு; சாதாரண சிங்கள மக்கள் வேறு என்றுஉங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. சிங்களவர்கள் எல்லோருமே கொடியவர்கள் என்றே சித்திரிக்கப்பட்டது. பெருவாரியான சிங்கள மக்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள். யுத்தத்தின் சுமைகள் அவர்களின் அன்றாட வாழ்க்கையும் அழுத்துகின்றன. யுத்தத்திற்காக வடகிழக்கிற்கு அனுப்பப்படும் தமது பிள்ளைகள் உயிருடன் திரும்ப வேண்டும் என்று உங்களைப்போல் அவர்களும் பௌத்த ஆலயங்களில் உள்ள அரசமரங்களின் கீழ் நேர்த்திகள் வைக்கிறார்கள்.

1988 - 90 காலப்பகுதியில் 25ஆயிரத்துக்குமேற்பட்டசிங்கள இளைஞர்கள் அரச பயங்கரவாதத்தாலும் சட்ட விரோத அரச ஆதரவுக்குழுக்களாலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிணங்கள் ரயர் மாலைளுடன் வீதிவீதியாக எரிந்திருக்கின்றன; களணி கங்கையில் இவர்களின்பிணங்கள் மிதந்திருக்கின்றன. அவர்களுக்கும் கொடூரங்கள் தெரியும். ஆனால் மக்களின் மரணத்தில் குளிர்காயும் பச்சை இனவாதிகள் தமிழர் விரோத கருத்தை ஊட்டி வருகிறார்கள். சிங்கள மக்கள் பாதுகாப்பு இயக்கம், பூமிபுத்திரா, ஹெலஉறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, சில பிரபல சிங்கள தினசரிகள் போன்றவை இனவாத விஷம் கக்குகின்றன.

தமிழ் மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று யுக்திய, ராவய, ஹிர போன்ற பத்திரிகைகள் எழுதுகின்றன. பல படித்த பண்புள்ள மனிதர்கள் இதற்காக சிங்கள கிராமங்களில் பிரச்சாரம் மேற்கொள்கின்றார்கள். சில இடதுசாரி அரசியல் தலைவர்களும் முன்னணியில் நின்று செயற்படுகின்றார்கள்.

கிருஷாந்தி, ரஜனி ஆகியோர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக பெருவாரியான சிங்கள பெண்விடுதலையாளர்களும், முற்போக்கு அரசியல்வாதிகள், மனித உரிமைவாதிகளும் தெருமுனைகளிலும் நீதிமன்ற வாசல்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துகின்றனர். ஆனால் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனையில் வசிக்கும் எம் தமிழ் மக்கள் இத்தகைய விடயங்களில் பங்குபற்றுவதுஅரிதிலும்அரிதோடு எமது சமுதாயத்தை பயம் ஆக்கிரமித்திருக்கின்றது.

(தொடரும்)

## சமூக மேம்பாட்டு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 10

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள ''சமூக மேம்பாடும் விழுமியங்களும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு (இலங்கை நேரம்) நல்லூர் பிரதேச செயலர் பணிமனையில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச இளைஞர் வள நிலைய அங்கத்தவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி கமலா சிவசிதம்பரம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். (ஐ)

## கல்விநிலையம்: திறக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெ.10

கடந்த ஒருவாரமாகமூடப்பட்டிருக்கும் வெளிவாரிப் பட்டப் படிப்பு நிறுவனமான வடமராட்சி ''நல்லொழுக்க கல்வி நிலையத்தை'' மாணவர் நலன் கருதி திறக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் கல்விபயின்ற மாணவர்களில் 120 பேர் கைச்சாத்திட்டு, போரூட் நிறுவனத் திட்டப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட மகஜரிலேயே இக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேவை நலம் பாராட்டு

எமது வித்தியாலயத்தில் கணித ஆசிரியராகவும், பிரிவுத் தலைவராகவும் கடமையாற்றுகின்ற

## செல்வி சரஸ்வதி கந்தசாமி

அவர்கள்

தனது இருபத்தைந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தமையையிட்டு வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

**யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

(9265)

# வரவேற்று பாராட்டி வாழ்த்துகிறோம்

இன்று யாழ். வலயம் - Iஇன் கல்விப் பணிப்பாளராக வருகை தரும்

## திரு. சு. இரத்தினராசா

அவர்களை

அன்போடு வரவேற்று பெரிதும் பாராட்டி சிறப்புற வாழ்த்துகிறோம்.

(45190) தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் சங்கம்.

# நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள்

குரும்பசிட்டிக் கிராம பொது நல அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்கம், வளர்மதி சனசமூக நிலையம், நலிவுற்றோர் நலனோம்பு நிலையம், ஐக்கிய நாணய சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, பிரசைகள் குழு, அருள்மிகு முத்துமாரி அம்பாள் பரிபாலனசபை, பொதுசன நூலகம், விவசாயிகள் கழகம் என்பவற்றின் நிர்வாகத்திலும் வளர்ச்சியிலும் அரும்பணியாற்றி மயிலிட்டி கிராமசபை, வலிவடக்கு தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி அமைப்பு என்பவற்றின் முன்னாள் தலைவராகவும், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவும், வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவராகவும்,

சேவையில் உயர்ந்து நிற்கும்

## திரு. ரி. வி. கிருஷ்ணசாமி

அவர்கள்

**யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்றமையை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.**

இது தொடர்பாக **10 — 02 — 97** இன்று பி. ப 2.00 மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் பாராட்டு வைபவ நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஆர்வலர்களை அழைக்கிறோம்.

★ குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்,
★ குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம்,
★ குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்,
★ வயாவிளான் மத்திய மகா வித்தியாலய, பழைய மாணவர் சங்கம்.

(சி/78)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## நவரத்தினம் ஆச்சிப்பிள்ளை

**தோற்றம்:** **18—09—1901**

**மறைவு:** **11—01—1997**

எங்கள் தந்தையாரை சிறுவயதில் இழந்த எம்மைக்கண்மணிபோல் இதுவரை காலமும் போற்றி வளர்த்த தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(9263)

# சமய சந்திகளில்

பன்னாகம் விசவத்தனை முருகன் ஆலயத்தில் கொடித்தம்ப விநாயகர் திருவுருவ பிரதிஷ்டா வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணி முதல் நடைபெறவிருக்கிறது. (ஐ-28)

★ ★ ★

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் மாசி மாத சங்கிராந்தி விஷேச சூரிய பூசையும், பொங்கலும் இடம் பெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

சங்கத்தானை ஈழவாரியம் பதியுறை ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர் வரும் வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

சாவகச்சேரி அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை விழா எதிர் வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன. பத்தாவது தினமான மாசி மகத்தன்று காலை சங்காபிஷேகமும், மாலை உற்சவமும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை சதுர்த்தி பூர்வபட்ச விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறும், 4.30 மணிக்கு விநாயகப் பெருமான் தெரு வீதியுலா வருவார். (ஐ-30)

## கல்வி நிலையம்...

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சேவை நோக்கத்துடன் இயங்கிய மேற்படி நிறுவனம் மூடப்பட்டதால் தமது உயர்கல்வி பாதிக்கப்பட்டிருப்பதாக மாணவர்கள் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இக் கல்வி நிறுவனம் 'போரூட்' அனுசரணையுடன் பருத்தித்துறையில் இயங்கியது. (அ-15)

# யூனிவேர்சல்

**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

## G. C. E. (A/L)

**பௌதிகவியல்**

**திரு. ஜெயசிலன் B.sc. (Hons) (Djp. in Ed.)**

## 98 A/L

**வெப்பவியல்**

**ஆரம்பம்: 10-02-97 திங்கள் பிற்பகல் 2-30 மணி**

## 99 A/L

**தூய/பிரயோக கணிதம்**

★ திரிகோண கணிதம் ★ சமநிலை

**திரு. கருணா**

**ஆரம்பம்: 10 - 02 - 97 திங்கள்** மாலை 4.00 மணி

(45207)

# ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 10 — 06 — 1922

இறப்பு: 23 — 01 — 1996

## தம்பு துரைச்சாமி

(ஓய்வுபெற்ற அதிபர்)

ஆண்டு ஒன்று போனதே ஐயா நீர் எமைப் பிரிந்து; ஈண்டு உமை நினைந்து அஞ்சலித்து நிற்கின்றோம்! மாண்டு போன தன்மையால் மனக் கவலை மாறுமோ? யாண்டு நின்று நிலைக்குமே நினது புகழ் நிச்சயம்!

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

484, கண்டி வீதி,
அரியாலை.

(சி-0103)

# கண்ணீர் அஞ்சலி

எமது ஊரின் அணிகலமாய் விளங்கிச் சமயத் துறையிலே வழிகாட்டி வந்த வணக்கத்திற்குரிய இந்து மத குருபீடாதிபதி

**கலாநிதி**

## ஸ்கந்தசாம்பசிவ சிவாச்சாரியார்

அவர்களின்

மறைவு கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம், அன்னவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை உரித்தாக்குகின்றோம்.

**யாழ்/ நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக்கழகம்,**
**நாயன்மார்கட்டு சனசமூகநிலையம்,**
**நாயன்மார்கட்டு வாழ் சைவமக்களும்.** (45190)

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### பழைய மாணவர் சங்க ஆதரவில்

## ★ நூலக வாரம் ★

**(10 - 02 - 97 — 14 - 02 - 97)**

**இடம்:** கல்லூரி கலையரங்க மண்டபம்
**நேரம்:** காலை 8-50 (புதிய நேரம்)
**தலைவர்:** திரு. ந. சிவகடாட்சம் (அதிபர்)

| தினம் | பிரதம விருந்தினர் | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|
| 10 - 02 - 97 (திங்கட்கிழமை) | சுவாமி சித்ரூபானந்தா, முதல்வர் (ஸ்ரீஇராம கிருஸ்ண சாரதா ஆச்சிரமம்) | திரு. பொ. விக்கினேஸ்வரலிங்கம் (பழைய மாணவர், பிரதம எழுதுவினைஞர்) |
| 11 - 02 - 97 (செவ். கிழமை) | சிவத்திரு. கு. சுந்தராசக்குருக்கள் (பழைய மாணவர்) | திரு. வி. சோமசுந்தரம் பீ. ஏ. (பழைய மாணவர் முன்னாள் உப அதிபர்) |
| 12 - 02 - 97 (புதன்கிழமை) | திரு. தி. சோமசேகரம், அதிபர் (யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் த. க. பாடசாலை) | திரு. எஸ். பரமானந்தன் (பழைய மாணவர்) |
| 13 - 02 - 97 (வியாழக்கிழமை) | திரு. எஸ். குமாரசாமி (தலைவர், நீர்வேலி ப. நோ. கூ. ச.) | திரு. க. விநாயகலிங்கம், அதிபர் (பழைய மாணவர் கோப்பாய் வடக்கு றோ. க. பா.) |
| 14 . 02 - 97 (வெள். கிழமை) | வைத்திய கலாநிதி வை. தியாகராஜா (பாடசாலை நலன் விரும்பி, பழைய மாணவர், சமூக சேவையாளர்) | திரு. எஸ். கே. தங்கவடிவேல் (ப. ம. ச. செயலாளர், விலை மதிப்புப் பரிசோதகர்) |

★ **10-02-97** அன்று சுவாமி சித்ரூபானந்தா அவர்களால் பாடசாலைக்கு நூல்கள், சுவாமி விவேகானந்தர் திருஉருவப் படம் அன்பளிப்பு செய்யப்படுவதுடன் சுவாமி விவேகானந்தர் நினைவு தின நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

★ **14-02-97** அன்று 1996/97 கல்வியாண்டுக்கு எமது பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் புகும் பின்வரும் மாணவர்களை பாராட்டுதலும், பரிசளித்தலும் நிகழும்.

| | |
|---|---|
| செல்வன் த. உபேந்திரன் - பொறியியல் | செல்வி கு. பாலகுமாரி - வர்த்தகம் |
| செல்வன் இ. மயூரன் - பொறியியல் | செல்வி நா. சசிகலா - கலை |
| செல்வி செ. ஜெயசுதா - முகாமைத்துவம் | செல்வி செ. தயாநிதி - கலை |
| செல்வன் நா. கமிலஸ் - வர்த்தகம் | செல்வன் சி டயஸ்தாசன் - பௌதிகவிஞ்ஞனம் |

மேற்படி வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

''நூலகம் வளர நூல்கள் அன்பளித்து உதவுவோம்''

**எஸ். கே. தங்கவடிவேல்,**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(45200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

லவ்பேர்ட்ஸ், பான்ரெயில் புறாக்கள், ஜேசி இனஇரண்டு பால் மாடுகள் கன்றுடனும், நல்ல பாவிப்பில் உள்ள ஈஸ்ரன் சைக்கிள்கள், வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக் குண்டு. இல. 27, (B-238), 1 ஆம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (இந்துக் கல்லூரிக்குப் பின்னால்). (45146)

பலதரப்பட்ட அளவுகளில் அஸ்பெஸ்டஸ் சீற் பூட்டிய இரண்டு கொட்டில்கள், வேப்ப மரங்கள், மற்றும் கொங்கிறீட் கற்கள், வேப்பம் விறகுகள் விற்பனைக்குண்டு. இல. 27, (B- 238) 1 ஆம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (இந்துக் கல்லூரிக்குப் பின்னால்). (45145)

நல்லின ஜேர்மன் செப்பேட் 2½ வயது பெண் அல்சேசன் நாய், 5 மாதமுடைய பொமனேறியன் குட்டிகள், 3½ மாத சினை ''ஐமுனா பாரி'' பால் ஆடு, 8 மாத ''ஐமுனாபாரி'' கிடாய் ஆடுகள் விற்பனைக்குண்டு. இல. 27, (B-238) 1 ஆம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (இந்துக் கல்லூரிக்குப் பின்னால்). (45144)

சீலிங், மேசை, பெடஸ்ரல் மின்விசிறிகள், ரீ. வீ. பூஸ்ரர் விற்பனைக்குண்டு. சு. சண்முகராஜா (விலை மதிப்பீட்டாளர்) 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (45178)

### திருமணசேவை

எமது சேவை சகல மணமக்களுக்குமானது. நம்பகம், தகுதி, சேவை நோக்குடையது. சிரமமின்றி பெற்றோர் நேரில் வருவதே பொருத்தமான மணமக்கள் தேர்வுக்கும், விரைவான திருமணங்களுக்கும் வழியாகும். ''சேவை நம்பகம்'' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். (45196)

### மணமகள் தேவை

இந்து செவ்வாய் குற்ற மற்ற, ரேவதி நட்சத்திரம், அமெரிக்காவை வதிவிடமாகக் கொண்ட வங்கி ஊழியர், 41 வயது மணமகனுக்கு 32 வயதுக்கு மேற்படாத மணமகள் தேவை. சு. சண்முகராஜா (விலை மதிப்பீட்டாளர்), 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (45177)

### ஆசிரியர் தேவை

ஜீ.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவருக்கு அளவையியல், பொருளியல், வர்த்தகம் ஆகிய பாடங்களில் துரித பயிற்சியளிக்க ஆசிரியரோ/ ஆசிரியர்களோ அல்லது சித்தியடைந்த பல்கலைக் கழக மாணவரோ உடன் தேவை. யாழ். நகரை அண்மித்த பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. மேலதிக விவரங்கள் நேரில். தொடர்பு: மே/பா இல.582, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (45186)

## தராசு படிகள் முத்திரை இடல்

கொழும்புத்துறை, பெப் 10.

பருத்தித்துறை நகர சபைக் கட்டத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறும்.

புதன்கிழமை தவிர்ந்த ஏனைய வேலை நாள்களில் இப்பணி நடைபெறும்.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பகுதியைச் சேர்ந்த சகல வியாபாரிகளும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-30)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்

**சீ. சாந்தநாதன் (கணித ஆசிரியர்)**

அவர்களின் தாயாரின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
**யா/தேவரையாளி இந்துக்கல்லூரி**
கரவெட்டி.

(9260)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: **29—04—1942**

மறைவு: **10—02—1996**

அமரர்
### அகிலேசர் பொன்னம்பலம்

(மேலதிக மாவட்டப் பதிவாளர், யாழ்ப்பாணம்)

அலுவலகத்தை அலங்கரித்த
அமைதியின் நாயகனே!
ஒளிவீசிக் கொண்டிருந்து
உதிர்ந்து விட்ட தாரகையே
ஒரு கூட்டுக் குருவிகளாய்
உவகையுடன் இருந்த நாம்
கூடுகலைந்த குருவிகளாய்
திசைமாறிப் போனதென்ன!
முகவரிகள் தொலைத்துவிட்டு
முகமறியா இருளில் தவித்து
பின் தெளிந்தபோது
தலைவனே உமை இழந்த செய்திகேட்டு
திடுக்கிட்டோம் பரிதவித்தோம் தேறி மீண்டு
திசைதேடி எம் கூடு அடைந்தபோது
உம் நினைவு எம்மனதை வாட்டிடுதே
ஓராண்டின் முன்
உம்மை இழந்த இத்தினத்தில்
அண்ணலே உம் நினைவை மீட்டுகின்றோம்
அரனாரின் அடியிணையில் நீர் அடைக சாந்தி.

**மாவட்ட காணிப் பதிவக அலுவலர்களும், விவாக, இறப்பு, பிறப்பு பதிவாளர்களும்.**

மாவட்ட காணிப் பதிவகம்,
யாழ்ப்பாணம்.

(45171)

## பாராட்டுகின்றோம் வாழ்த்துகின்றோம்

யா/கரணவாய் மணியகாரன் தோட்டம்
தமிழ் வித்தியாலய அதிபராக
நியமனம் பெற்று தற்போது
யா/யார்க்கரு விநாயக வித்தியாலய
அதிபராக பதவி உயர்வுடன் செல்லும்

### திரு. சி. வல்லிபுரம்

அவர்களை சிறந்த அதிபராகவும், புலமைப்பரிசில் பயிற்சி பேராசானுமாக மேன்மேலும் சிறப்புற்று ஒளி வீசிட **வாழ்த்துகின்றோம்.**

இயக்குநர், ஆசிரியர்கள்.
ரலன்ற் இன்ஸ்ரிரியூட்
கரவெட்டி.

(சி/94)

## சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு மாணவர் வினாப்போட்டி முடிவுகள்

**முதலாம் பரிசு:**
செல்வி திவ்வியா சிவலிங்கம்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**இரண்டாம் பரிசு:**
செல்வி இ. காயத்ரீ
(வேம்படி மகளிர் கல்லூரி)
செல்வன் யோ. ஸ்ரீகாந்தன்
(பரி. யோவான் கல்லூரி)

**மூன்றாம் பரிசு:**
செல்வன் ச. முகிர்நாத்
(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
செல்வி கேதா சரவணமுத்து
(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
செல்வன் சண்முகசுந்தரம் திருக்குமரன்
(யாழ். இந்துக் கல்லூரி)

ஆறுதல் பரிசு பெறுபவர்களுக்கு நேரடியாக கடிதங்கள் அனுப்பப்படும்.

முக்கிய குறிப்பு: லேக்ஹவுஸ் பத்திரிகை நிருபர்கள் சேவாச்சிரமத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

— **செயலாளர்.**

ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை,
07-01-97.

(சி-97)

## முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



### திருமதி கார்த்திகேசு மாணிக்கம்

மண்ணுலகில்: **11—04—1907**

விண்ணுலகில்: **23—01—1996**

**திதி: 10-02-1997**

தலைவிதி சென்ன வழியில்
யாழின் புலப் பெயர்வு
ஓடிய சாவகச்சேரியில்
பிரிந்ததோ அம்மா! உன் ஜீவன்
ஆண்டுகள் பல சென்றாலும்
எம் நெஞ்சைவிட்டு
நீங்காது அம்மா உன் நினைவு.
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

தகவல்;
கார்த்திகேசு நடராசா
(மகன்)

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

(9261)

## வாழ்த்துகின்றோம்

ஆசிரிய சேவையில வெள்ளிவிழாக் காணும்
யா/மானிப்பாய்

### இந்துக் கல்லூரி ஆசிரியமணிகள்

| | |
|---|---|
| செல்வி நா. ஆசைப்பிள்ளை | (ஆங்கில ஆசிரியை) |
| திரு. சி. முத்துலிங்கம் | (விஞ்ஞான ஆசிரியர்) |
| செல்வி வ. சோதிரத்தினம் | (விஞ்ஞான ஆசிரியை) |
| திரு. க. ஜெகநாதன் | (விஞ்ஞான ஆசிரியர்) |
| திரு. ந. லோகேஸ்வரன் | (கணித ஆசிரியர்) |
| திரு. சி. உதயபாலன் | (கணித ஆசிரியர்) |
| திரு. த. கனகராஜா | (கணித ஆசிரியர்) |
| திரு. சி. றொபேட் | (கணித ஆசிரியர்) |

இவர்களை தங்கள் சேவையில் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,**
**மானிப்பாய்.**

(45184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சாத்தியமா?

தமிழ் மக்கள் அமைதியாக வாழ்வதற்கு அரசு வழி கண்டாக வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி உள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர்.

அஸ்வர், தமது நீண்ட உரையில், தமிழ் மக்கள் கண்டபடி கைது செய்யப்படுவது குறித்துப் பல உதாரணங்களுடன், சம்பவ ரீதியான விவரங்களையும் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் மக்கள் அடிமைகள் என்ற நிலையில் கணிக்கப்பட்டு, கண்டபடி கைது செய்யப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும், கொல்லப்படுவதும், காணாமற் போகச் செய்யப்படுவதும் ஒன்றும் புதியவை அல்ல.

தமிழர்கள், அவர்கள் தமது சொந்த மண்ணில், வடக்கு—கிழக்கில் வாழ்பவர்களாயிருப்பினும் சரி தான், நாட்டில் வேறு எந்தப் பகுதியில் எத்தனை சந்ததிகளாக வாழ்பவர்களாயினும் சரி தான், அரசாங்கத்தின் கண்ணுக்கு—பொலீஸ் உட்பட்ட பாதுகாப்புப் படையினரின் கண்ணுக்கு — சந்தேகப் பிராணிகளாகவே தெரிகிறார்கள்.

கண்ணில் அணிந்திருக்கும் கண்ணாடி எந்த நிறமோ, காட்சியும் அந்த நிறமாகவே தெரிவது ஒன்றும் புதுமையல்லவே!

தமிழர்களின் இந்தப் பரிதாபத்துக்குரிய—வேதனைக்குரிய—நிலைமை அவர்கள் தமது நியாயமான உரிமைகளைக் கேட்க ஆரம்பித்த நாள் தொடக்கமே முகிழ்த்து விட்டது.

அஸ்வர் அவர்கள் பிரதி அமைச்சராக அங்கம் வகித்த ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்திலும், தமிழர்கள் மிருகங்களாகக் கருதப்பட்டுக் கொடுமைப் படுத்தப்பட்டார்கள். அதனை மறந்து விடுவதற்கில்லை.

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி அவர்கள் வாழ்வில் அமைதியைக் கொண்டுவரப் போவதாகக் கூறிப்பதவிக்கு வந்த இந்த அரசாங்கத்தின் காலத்திலும், அதே நிலைதொடர்வது தான், தமிழ்மக்கள் மத்தியில் பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது.

தமிழர்கள் இரண்டாம் தரப் பிரசைகள்; அவர்களை எதுவும் செய்யலாம்; எப்படியும் நடத்தலாம்; தட்டிக்கேட்க எவரும் இல்லை; தட்டிக் கேட்டாலும் அதற்குக் காது கொடுக்க வேண்டும் என்றில்லை; என்ற அணுகுமுறையை பதவியில் இருக்கும் அரசு கைக்கொள்ள —

அடுத்துப் பதவிக்கு வரும் மாற்று அரசு, தமிழர்கள் மீதான அட்க்கு முறையை மேலும் பல படிகள் உயர்த்தி, தரத்தைக் கூட்டுவதே, இந்த நாட்டின் அரசியல் ஆட்சிப் ''பண்பாகி'' விட்டது; நடைமுறையாகி வருகிறது.

புதிய உலக அரசியல் பரிமாணங்களை, பார்வை தெளிவான பழுதிலாத கண்ணுடன் நோக்கவும், அதற்கேற்ற வகையில் தனது போக்கை மாற்றவும் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவங்கள் மனங்கொள்ள வேண்டும்.

மானுடம் புரிந்துகொள்ளப்பட வேண்டும். வாழு; வாழவிடு என்ற கோட்பாடு மேலோங்க வேண்டும்.

அது இப்போதைக்குச் சாத்தியமாகுமா?

# வேவு விமானத்தை புலிகள் கைப்பற்றினரா?

## படை வட்டாரங்களில் சந்தேகம்

கொழும்பு, பெப் .10

கடந்த மாதம் வடக்கில் காணாமற்போன இஸ்ரேலியத் தயாரிப்பான — விமானி இன்றிப் பறக்கும் —வேவு விமானம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பாதுகாப்பு வட்டாரங்களில் தற்போது தோன்றியுள்ளது.

கணனிக் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்த வேவு விமானம் (யு. ஏ. வி) விடுதலைப் புலிகளால் தமது பகுதிக்குள் அநாமதேய கணனி சமிக்ஞைகள் மூலம் தரையிறக்கப்பட்டிருக்கலாம் என கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வானில் உயரப் பறந்தவாறே தரையில் உள்ள இலக்குகளைத் துல்லியமாக இனங்கண்டு படமாக்கி கட்டுப்பாட்டு நிலையத்துக்குவழங்கும் நவீன கணனி வசதிகளைக் கொண்ட இந்த விமானம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் விழுந்து விட்டதாக முதலில் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

(ஐ–3)

# போக்குவரத்து அமைச்சுப் பதவி சிறிமானியிடமிருந்து பறிப்பு?

கொழும்பு, பெப். 10

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடாமல் தேர்தலில் நடுநிலைமை வகிக்கப் போவதாக அறிவித்துள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவியும், அமைச்சருமான ஸ்ரீமானி அத்துலத்முதலியிடமிருந்து போக்குவரத்து அமைச்சுப் பதவி பறிக்கப்படலாம் என்று ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீமானி அத்துலத்முதலியின் பொறுப்பில் போக்குவரத்து அமைச்சும், சுற்றுப்புற, மகளிர் விவகார அமைச்சும் உள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட அவரின் கட்சி மறுத்துள்ளதையடுத்து எழுந்துள்ள சூழ்நிலையில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம். ஜயரத்தின உத்தியோகபூர்வ ரீதியில் அவருக்கு கடிதம் ஒன்றை இரண்டொரு தினங்களில் அனுப்பவிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

தேர்தல் மேடைகளில் அரசுக்கு ஆதரவாகப் பேசுமாறு இக்கடிதத்தில் கோரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கோரிக்கையை அவர் ஏற்காத பட்சத்தில், அவரின் பொறுப்பில் உள்ள போக்குவரத்து அமைச்சைப் பறிப்பது குறித்து அரச உயர் மட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரிகின்றது.

தற்போதைய உப சபா நாயகராக இருக்கும் அனில் முனசிங்கவுக்கு போக்குவரத்து அமைச்சு வழங்கப்படலாம் என அறியவந்தது.



இதே நேரம் —

'' எம்மை பழி வாங்க முடியாது. அமைச்சுப் பதவியைக் காட்டி எங்களை 'பிளாக்—மெயில்' செய்ய முடியாது.'' என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க தெரிவித்துள்ளார்.

(உ-3-150)

## கொழும்பு மேயர் பதவி:

# ஐ. தே. க. வேட்பாளர் கரு ஜெயசூரியா!

கொழும்பு, பெப். 10

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு ஐ.தே.கவின் சார்பில் அதன் தவிசாளர் கரு ஜெயசூரிய போட்டியிட இருக்கிறார்.

இவரை மேயர் பதவிக்கு நிறுத்துவதை ஐ. தே. கவின் முன்னாள் மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் எதிர்த்தனர். ஆனால் ஐ. தே. க. தலைவர் ரணில்விக்கிரமசிங்க தலையிட்டு அவர்களைச் சமாதானப்படுத்தினார் என்று கூறப்படுகின்றது.

இதற்கிடையில் —

ஐ தே.கவின் பொருளாலர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் முன்னாள் கொழும்பு மேயர் கணேசலிங்கம் விலகியிருப்பதை அடுத்து —

புதிய பொருளாளரைத் தெரிவு செய்வதற்காக கட்சியின் பொதுச் சபை எதிர் வரும் 14 ஆம் திகதி கூடவிருக்கிறது.

அதேசமயம் —

கணேசலிங்கத்தின் விலகலினால் கொழும்பில் தமிழ் வாக்காளர்களின் ஆதரவை ஐ. தே. க. இழந்து விடும் ஆபத்து இருப்பதால் அதைத் தவிர்ப்பதற்காக மாநகர சபைத் தேர்தலில் ஐ. தே. க. சார்பில் முன்னாள் ஜனாதிபதி நாட்டுத் தூதுவரான சாளி எஸ். வி. மகேந்திரனை நிறுத்துவது குறித்து கட்சி உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது..

அதேவேளை —

கொழும்பு மாநகர சபைக்கான ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் எம். எஸ். செல்லச்சாமியின் கட்சிக்கு இரு இடங்களும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (காமினி) பிரிவுக்கு 3 இடங்களும், ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்கு 2 இடங்களும் ஒதுக்சப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

(உ-3-150)

## நாளை

**தை 29**

**செவ்வாய்க்கிழமை**

திதி: சதுர்த்தி பிற்பகல் 1.03 வரை.

நட்சத்திரம் உத்தரட்டாதி பிற்பகல் 12.46 வரை.

ராகுகாலம்: 03.34 - 5.04

சுபநேரம்: 11. 04- 12.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# மட்டக்களப்பு நகரில் தீவிர சோதனை!

மட்டக்களப்பில்விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள்தீவிரமடைந்துள்ளதையடுத்து மட்டு நகரில் படையினரின் சோதனைகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கோட்டைமுனை, கோவிந்தன் வீதி வழியாக நகருக்குள் செல்வோர் கடும் சோதனைகளுக்கு உள்ளாகின்றனர்.

நகருக்குள் 5 பிரபல பாடசாலைகளும், அரச அலுவலகங்களும், வங்கிகளும் அமைந்துள்ளதால், நகருக்குள் செல்லும் கோட்டைமுனைப் பாலத்தில் காலை நேரத்தில் ஏராளமான வாகனங்கள் கியூவில் காத்துக்கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

# பயணிகள் சேவையில் 'லங்கா முடித' கப்பல்!

திருகோணமலை, பெப். 10

வடபகுதிக்கான பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட 'லங்கா முடித' கப்பல் இனி பயணிகள் சேவையில் ஈடுபடவிருக்கிறது.

இக் கப்பல் முதல் தடவையாக திருகோணமலையில் இருந்து 350 பயணிகளைக் காங்கேசன்துறைக்கு நேற்று ஏற்றி வந்திருந்தது.

கொழும்பில் இருந்து வடபகுதிக்கான சரக்குகளை ஏற்றிக் கொண்டு நேற்று முன்தினம் திருமலை வந்த இக் கப்பல் அங்கு வைத்து 350 பயணிகளையும் ஏற்றிக் கொண்டு நேற்று காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தது.

இங்கு பொருள்களை இறக்கி விட்டு இக் கப்பல் காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் தொடர்ந்து பயணிகள் சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் —

திருகோணமலையில் இருந்து மூன்று கப்பல்கள் பயணிகளுடன் நேற்று மாலை காங்கேசன்துறை நோக்கிப் புறப்படவிருந்தன.

(உ–3-150)

# மதில்கள், வேலிகளை அகற்றுமாறு பணிப்பு

கொழும்பு, பெப். 10

வாழைச்சேனை - கல்குடா வீதியில் சுமார் 3 மைல் தூரத்திற்கு அமைந்துள்ள மதில்களையும், வேலிகளையும் அகற்றுமாறு படையினர் பணிப்புரை விடுத்தனர்.

இந்தப் பணிப்புரையை அடுத்து அப்பகுதியில் உள்ள மக்கள் தமது வீட்டு வேலிகளை அகற்றினர். ஆனால் மதில்களை உடைத்து அப்புறப்படுத்த அவர்கள் பின் நின்றார்கள்.

அதேநேரம் —

கல்குடா இராணுவத்தினர் வியாழனன்று கவசவாகனங்களுடன் சென்று சுமார் ஐம்பது வீடுகளின் மதில்களை அகற்றினர் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இப்பணியில் வீடுகளில் இருந்தவர்களும், வீதியில் சென்றவர்களும் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மட்டக்களப்பு எம்.பியான துரைராஜசிங்கம் வாழைச்சேனை இராணுவ அதிகாரி கேணல் சில்வாவிடம் முறைப்பாடு செய்தார்.

இந்தச் செயலை உடன் நிறுத்துமாறு தாம் பணிப்புரை விடுத்துள்ளதாக அந்த அதிகாரி எம்.பியிடம் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். ஆஸ்பத்திரிக்கு இந்திய டாக்டர்கள்!

இந்திய டாக்டர்கள் மற்றும் தாதிமாரை ஒப்பந்த அடிப்படையில் யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்றுவதற்கு நியமிப்பது குறித்து கொழும்பில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

யாழ். ஆஸ்பத்திரிக்கு 27 வைத்திய நிபுணர்கள் தேவையாக இருக்கின்ற போதும் தற்போது இரு வைத்திய நிபுணர்களே அங்கு பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, இந்த நடவடிக்கையை வடக்கு மீள்குடியேற்ற அதிகாரசபை எடுத்துள்ளது.

இந்தியாவில் இருந்து தமிழ் தெரிந்த டாக்டர்கள், தாதிகள் என்று 100 பேரை 2 வருட ஒப்பந்தத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் நியமிக்க பேச்சுக்கள் நடைபெறுகின்றன. அவர்களுக்கான சம்பளத்தை இந்தியாவில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பளக் கொடுப்பனவை வழங்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க இந்தியாவின் உதவி முதலில் நாடப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல

# உணவு முத்திரை கையளிப்பு முக்கியம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு விமானம் அல்லது கப்பல் மூலமாகச் செல்பவர்கள் தமது குடும்ப அட்டை, உணவு முத்திரை ஆகியவற்றைக் கையளித்து கடிதம் பெறாவிட்டால் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் பணியகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கப்பல் அல்லது விமானம் மூலம் பயணம் செய்ய இருப்பவர்கள் தமது குடும்ப அட்டை, உணவு முத்திரை ஆகியவற்றை பயணத்திகதிக்கு முன்பாக பிரதேசசெயலகங்களிலோ அல்லது யாழ். செயலகத்திலோ ஒப்படைக்கலாம்.

அல்லது பயணம் செய்யும் திகதியில் யாழ். மத்திய கல்லூரியில் பயணம் செய்யும் இடத்தில் உள்ள செயலக அதிகாரிகளிடமும் அவற்றை ஒப்படைக்கலாம்.

இந்தப் பத்திரங்கள் ஒப்படைக்கப்பட்டதற்கான சான்றிதழ்களை இரு பிரதியுடன் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே பயணம்மேற்கொள்ள முடியும்.

திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுடன் வடக்கே வருபவர்கள் (Return - Ticket) இந்த நடைமுறையைப் பின்பற்றத் தேவையில்லை என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

மலர்வு: 8 – 11 – 1964

உதிர்வு: 3 – 02 – 1997

## அமரர் சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் B. A. ஆசிரியர்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு தங்கள் அன்பையும் அனுதாபத்தையும், தெரிவித்ததுடன் பல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**அப்பா:** அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
**அம்மா:** மங்கையர்க்கரசி சுந்தரம்பிள்ளை
**மனைவி:** இராஜராஜேஸ்வரி மணிவண்ணன்
**பிள்ளைகள்:** ம. திருமகள், ம. சுபாஜினி

30, கடைச்சாமி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம். [45197]

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தியாகராஜா

(ஓய்வுபெற்ற லிகிதர், சாம்பமூர்த்தி அன் கோ)

கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கனடாவில் வசித்தவருமான கந்தையா தியாகராஜா கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், வீரசிங்கம் தம்பதிகளின் புதல்வி புஸ்பலீலாவின் அன்புக் கணவரும், சுனித்திரா (கனடா), நிர்மலன் (கனடா), நிரஞ்சன் (கனடா), நிரோதயன் (கனடா), நிருபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விசாகேஸ்வரன் (கனடா), ஜீவஜோதி (கனடா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புஸ்பாகரன் (வெள்ளை)
(மைத்துனர்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (45202)

## திருமதி மாரிமுத்து சாவித்திரிதேவி

(பாமா)

பண்டத்தரிப்பு பனிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சாவித்திரிதேவி 13 - 01 - 1997 அன்று புளியம்பொக்கனையில் காலமாகி விட்டார்.

அன்னார் மாரிமுத்துவின் (ராசா) அன்பு மனைவியும், கதிரவேலு தம்பதிகளின் மகளும், கிருஷ்ணா, உதயகுமார், ஸ்ரீரங்கன், காலஞ்சென்ற சுதாகரி, சுபாகரி, பவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14 - 01 - 1997 அன்று புளியம்பொக்கனையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

க. சின்னத்தம்பி
(மச்சான்)
அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.
(45203)

மா. கிருஷ்ணா
(மகன்)
விநாயகர் அரிவு ஆலை,
பிரதான வீதி,
சங்கானை.

## பரமசிவம் உமாதேவி

(காரைநகர், களபூமி, விளானை)

விளானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காரைநகர் பலகாட்டை வதிவிடமாகக் கொண்டவருமான பரசிவம் உமாதேவி 09-02-97 இல் காரைநகரில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (மலாயன் பென்சனியர்), மற்றும் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி தம்பதிகளின் அன்பு மருமகளும், பரமசிவத்தின் அன்பு மனைவியும், அன்னபாக்கியம், பரமேஸ்வரி, திலகவதி, காலஞ்சென்ற புனிதவதி மற்றும் திருநாவுக்சரசு (லண்டன்), வீரசிங்கம் (நீர்கொழும்பு), புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈஸ்வரியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-02-97) காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. திலகவதி
(சகோதரி)

விளானை,
களபூமி,
காரைநகர். (45204)

## தீர்வுத்திட்டம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகள் தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் விவாதங்களின் ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகளுடனும் பேசப்படும். அதற்கான வாய்ப்பை அரசு நிராகரிக்கவில்லை.

'' தீர்வுப் பொதி விவாதத்தில் இணக்கம் ஏற்படும் போது விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற அத்தியாவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

'' சில நிபந்தனைகளின் கீழ்த்தான் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்று ஜனாதிபதியும், அரசாங்கமும் கொண்டுள்ள தற்போதைய நிலைப்பாட்டை விட்டு, அவர்களுடன் பேச கால அட்டவனை வைக்கப்படும்.

'' அரசியல் பிரச்சினைகள் குறித்துப் பேச விடுதலைப் புலிகள் தயாராக வேண்டும். வெறும் புனர்வாழ்வு, புனரமைப்பு பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்க முடியாது.

'' நாம் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு எதிரானவர்களல்லர். அவர்களுடன் பேசுவதா? இல்லையா? என்பது அல்ல இப்போதைய பிரச்சினை.

''எப்போது — எந்தச் சூழ்நிலையில் —எந்த அடிப்படையில் பேசுவது என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை — என்றார்.

'' அரசின் மீது தமிழ் மக்களின் நம்பகத்தன்மை கட்டி எழுப்பப்பட்டுள்ளதா? '' என்று கேட்டதற்கு —

''பெருமளவு தமிழ் மக்களின் ஆதரவு அரசுக்கு இருக்கிறது. எனினும் ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகளைப் பேச்சுக்குக் கொண்டு வரத் தான் வேண்டும்.'' — என்றார் அவர்.

''இதற்காகத் தற்போது நடக்கும் தீர்வு குறித்த பேச்சுக்களை ஒதுக்கி வைக்கத் தேவையில்லை.'' — என்றும் அவர் சொன்னார்.

''கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டால் அது வடக்கு — கிழக்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் நடத்தப்படும்.

''உள்ளூராட்சித் தேர்தல்களின் முடிவு தீர்வுப் பொதியின் வெற்றியில் தங்கியிருக்கவில்லை. பல விடயங்கள் குறித்து தேர்தலில் பிரசாரம் செய்யப்படும். அதில் ஒன்று தான் தீர்வுப் பொதி விவகாரமாகும்.

உள்ளூராட்சித் தேர்தல் முடியும் வரை தீர்வுப் பொதியில் உள்ள முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது'' — என்று அமைச்சர் பீரிஸ் மேலும் கூறினார். (உ-3-150)

## வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசிக்கும் மக்கள் இந்தச் சத்தத்தைத் தெளிவாகக் கேட்டனர்.

இந்த குண்டுத் தாக்குதல் சத்தம் பெரிய இடியோசை போல அவர்களுக்கு கேட்டுள்ளது. இதனால் வீடுகள், கட்டடங்கள் அதிர்ந்தன. நிலமும் அதிர்ந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பின்னர் நேற்று மாலை 4 மணியளவிலும் வவுனியா மீது பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றது. இதனால் நகரில் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டன. எனினும் சேதவிவரங்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை வெளியாகவில்லை.

இதற்கிடையில் —

வவுனியா நகரப்பகுதியை நோக்கி கடந்த வெள்ளி இரவு விடுதலைப்புலிகள்மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலையடுத்து வவுனியா விமான நிலையத்தில் தரித்து நின்ற விமானங்களும், ஹெலிகளும் அவசர அவசரமாக அநுராத புரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன என்று [illegible] '' தெரிவித்தது. (உ-3-150)

# யாழ். புனரமைப்புக்கு துரித செயற்திட்டம்!

யாழ். மாவட்டத்தின் புனரமைப்புக்கு துரித திட்டம் ஒன்றை இம்மாதம் முதல் மேற்கொள்ள மீள்குடியேற்ற அதிகார சபை ஏற்பாடுகளை செய்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யும் இலக்குடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளும், வெளிநாட்டு அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களும் இத்திட்டத்துக்கு உதவ முன்வந்துள்ளன.

வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் நிதியுடன், மத்திய அரசின் அமைச்சுக்கள் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகம் வருடாந்தம் வழங்கும் நிதியையும் சேர்த்து இத்திட்டத்தை வடக்கு மீள்குடியேற்ற அதிகார சபை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

கடற்பகுதி போக்குவரத்தை மேம்படுத்தல், உள்ளூர் வீதிகளைப் புனரமைத்தல், பஸ் சேவையை சீராக்கல், மின் விநியோகம், குழாய் நீர் விநியோகம் சீராக்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவிருக் கின்றன.

ஜேர்மன் அரசும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமும் இத்திட்டத்துக்கு உதவவிருக்கின்றன.

6 கோடி 50 லட்சம் ரூபா ஆஸ்பத்திரி புனரமைப்புக்கும், 13 கோடி 30 லட்சம் ரூபா பாடசாலைப் புனரமைப்புக்கும் செலவிடப்படவிருக்கின்றன. (உ-3-150)

# ஸ்கொட்லண்ட் குழு கொழும்புக்கு வருகை

கொழும்பு, பெப். 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து கண்காணிப்பதற்காக பிரிட்டனின் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸ் பிரிவிலிருந்து இரு உயரதிகாரிகள் கொழும்புக்கு வந்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவர்கள் கலந்தாலோசித்ததாக அறிவிக்கப்பட்டது.

அயர்லாந்தின் ஐ.ஆர்.ஏ. தீவிரவாதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடவடிக்கைகளில் உள்ள ஒற்றுமைகள் குறித்து அவர்கள் ஆராய்ந்ததாக பொலீஸ்மா அதிபர் டபிள்யூ பி. ராஜகுரு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இரு தீவிரவாதக் குழுக்களின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வது குறித்தும் இரு தரப்பினரும் பேச்சு நடத்துவர் என்றும் அவர் சொன்னார்.

(உ-3)

## சென்னை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறவன்புலோ சச்சிதானந்தன், உலகத் தமிழர் அமைப்பைச் சேர்ந்த இராசநாயகம் மற்றும் உள்ளூர் டாக்டர் ஸ்ரீதர் ஆகியோரே கைது செய்யப்பட்ட மற்றைய நால்வராவர்.

இவர்களுடன் கைது செய்யப்பட்ட பாண்டியன் என்ற நபர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்ய முயன்றதாகவும் —

ஆனால் பொலீஸார் அதனைத் தடுத்துத் துப்பும்படி செய்து, அவரை மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடம் இருந்து வயலர்ஸ் கருவிகளும், ஒன்றரை லட்சம் ரூபா பணமும், விடுதலைப் புலிகள் வெளியிட்ட 'கெம்பக்ட் டிஸ்குகளும்' (ஒலி நாடாக்கள்) கைப்பற்றப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஈழவேந்தன் சென்னை நகரில் பல ஆண்டுகளாக வசித்து வருபவர்.

அண்மையில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் அவர் கலந்து கொண்டிருந்தார். (உ-3)

## மட்டு. ஒட்டமாவடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு பேர் காயமடைந்தனர்.

வாழைச்சேனை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஊர் காவலர் ஒருவரே புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் அடையாளம் காணமுடியாத அளவுக்கு எரிக்கப்பட்டிருந்தார் என்றும் —

ஒட்டமாவடிக் கிராமத்தை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததை அடுத்து வன்செயல்கள் பரவாமல் தடுக்கப்பட்டன என்றும் —

கொழும்பில் தகவல்கள் வெளியிடப்பட்டன.

(உ-3)

## இ.தொ.கா. ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்திருந்தார்.

இருதரப்பினரையும் தேர்தல் ஆணையாளருடன் பேசி முடிவுகாணுமாறு நீதிமன்றம் பணித்திருந்தது.

இந்த முயற்சியும் பலன் அளிக்காததால் மீண்டும் இ.தொ.க. நீதிமன்றம் சென்று மனுத்தாக்கல் செய்தது. அதை அடுத்து பொதுச் செயலாளர் யார் என்பதை தேர்தல் ஆனையாளர் இன்று அறிவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

இ.தொ.கா. செயலாளராக ஆறுமுகம் தொண்டமானே தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படுவதற்கு அதிக சாத்தியம் உள்ளதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## ஆயிரக்கணக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கைகளின் போது நிகழ்ந்த பெரும் இடப்பெயர்வு போல இந்த படை நடவடிக்கை காரணமாகவும் அலை அலையாக மக்கள் அகதிகளாக தங்கள் பூர்வீகக் கிராமங்களை விட்டு இடம் பெயர்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் நடத்தும் மடுஅகதி முகாம் நிரம்பி வழிகிறது.

ஆயிரக் கணக்கான மக்கள் மடு தேவாலயத்திலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கன்னாட்டி, கணேசபுரம், பெரியதம்பனை, பண்டிவிரிச்சான், மடுசாலை, பூவிழுந்தான் ஆகிய கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேறி விட்டனர். தமது உடைமைகளை இழந்த மக்கள் வீதிகளிலும், மர நிழல்களிலும் கண்ணீரோடு அடுத்து என்ன என்று தெரியாத ஏக்கத்துடன் சோர்ந்து கிடக்கிறார்கள்.

இரணை இலுப்பைக்குளம் பகுதியில் பெருவாரியான மக்கள் அகதிகளாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இராணுவம் எந்தத் திசையை நோக்கி அடுத்த நகர்வினை மேற்கொள்ளப் போகின்றது எனத் தெரியாத காரணத்தால் தமிழ் மக்களும் எந்தத் திசை நோக்கி தஞ்சம் தேடி ஓடுவது என்று தெரியாது தடுமாறி நிற்கின்றார்கள்.

— என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org